செ.வெ.எண்: 84 நாள்: 30.01.2017

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் தங்கும் இல்லங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம்-2014 மற்றும் விதிகள்-2015 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள தொண்டு நிறுவனம், தனியார், மத நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றால் நடத்தப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள், இல்லங்கள் ஆகியவற்றை சட்டப்பிரிவு 5,6 மற்றும் 12-ன் கீழ் விண்ணப்பித்து உரிமம்(Licence) அல்லது பதிவு(Registration) ஆகியவற்றை மாவட்ட ஆட்சியரிடம் பெற வேண்டும். இன்றிலிருந்து 6 மாத காலத்திற்குள் விண்ணப்பித்து உரிமம்(Licence) அல்லது பதிவு(Registration) பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்கண்ட சட்ட நடைமுறைகளை பின்பற்றாத விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஆகியவற்றை உடனே மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த சட்டத்தின் பிரிவு 20-ன் கீழ் காவல் துறை மூலம் வழக்குப்பதிவு செய்து நிர்வாகிகள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும். இதற்கான தண்டனை 2 ஆண்டு சிறைதண்டனையும், ரூ.50 ஆயிரம் வரை அபராதமும் விதிக்கப்படும். 2வது முறையாக வழக்குப்பதிவு செய்தால் 3 ஆண்டு சிறை தண்டனையும் ரூ.1 இலட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும்.

எனவே 18 வயதிற்கு உட்பட்ட மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் இல்லங்கள், குழந்தைகள் இல்லங்கள் மற்றும் விடுதிகள் நடத்துவோர் தங்களது நிறுவனத்தினை பதிவு செய்வதற்கு கீழ்க் கண்ட அலுவலகங்களை தொடர்பு கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.கணேஷ்.,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்:2, லெட்சுமி எஸ்டேட், இராஜகோபாலபுரம் அஞ்சல், புதுக்கோட்டை. தொலைபேசி எண்:04322-261266 மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், புதுக்கோட்டை. தொலைபேசி எண்:04322-222270.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**